பக்கங்கள்:-19

காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 09 | செவ்வாய்க்கிழமை | 23.01.2024 | அதிர்வு 175 |
| --- | --- | --- | --- | --- | --- |


## சிறீக்கு ரணில் வாழ்த்து மழை



(சீ.ஏ. தமிழ்மாறன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்

05



# தீர்வுக்கு இந்தியா கைவிரிப்பு திரும்பவும் ஒற்றுமைக் கயிறு

## தனது இயலாமையை மூடி மறைத்துச் சமாளிப்பதற்கு தமிழ்க் கட்சிகளுக்கு ஐக்கியம் பற்றிப் பாட போதனை

சீ.ஏ. தமிழ்மாறன் –

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான - நீதியான - தீர்வைப் பெற்றுத்தர வலிமையற்ற இந்தியா, தன் இயலாமையை மூடி மறைக்கப் புதுக்கதை - கயிறு - விடுகின்றது. இலங்கை அரசுக்கு எம்மால் வெறும் வலியுறுத்தல் மட்டுமே தர முடியும் எனக் கைவிரித்து விட்ட இந்தியா, தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக இருந்தால்தான் இலங்கை அரசிடமிருந்து ஏதாவது பெற்றுக்கொள்ள முடியும் என்று தமிழ்த் தலைவர்களை அழைத்து அரசியல் பாட போதனை - உபதேசம் - நடத்தி அனுப்பி வைத்திருக்கின்றது அது.

“இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்குமாறு அரசுக்கு எம்மால் (இந்தியா) வலியுறுத்த மட்டுமே முடியும். ஆனால், நீங்கள் (தமிழ்த் தேசியக் கட்சிகள்) ஒற்றுமையாக இருந்தால் இலங்கை அரசுக்கு வலுவாக அழுத்தம் கொடுத்து எந்தவொரு தீர்வையும் நீங்களாகவே பெற்றுக்கொள்ள முடியும். எனவே, உங்களுக்கிடையில் ஒற்றுமை மிகவும் அவசியம்.” - என்று இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் தெரிவித்திருக்கின்றார்.

05

## சம்பந்தன், கஜேந்திரகுமார் உட்பட 10 பேரைச் சந்தித்த இந்தியத் தூதர்

### விக்கி, சித்தர், செல்வம் மாயம்

(சீ.ஏ. தமிழ்மாறன்)

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் கொழும்பில் நேற்று இரண்டு மணிநேரம் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

இந்தியத் தூதரகத்தின் அழைப்புக்கிணங்க இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா, இந்நாள் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி., அக்கட்சியின் பேச்சாளர்

05





யாழ்ப்பாணத்திலிருந்து அரசியலில் ஈடுபட்டிருக்கும் வர்த்தகப் புள்ளியின் குடும்பத்தில் அடுத்த தலைமுறை வாரிசு ஒன்று கொழும்பில் பெருந்தொகை போதைப் பொருளுடன் மாட்டிக் கொண்டமை குறித்து இந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

நாட்டில் போதைப் பொருள் வர்த்தகம், பாவனை மற்றும் பாதாள உலக கோஷ்டிகள் மீதான பொலிஸாரின் ‘யுக்திய’ நடவடிக்கை சுமார் இரண்டு

05

# கொரோனாத் தொற்றை விட 20 மடங்கு கொடிய வைரஸ்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை



கொரோனா வைரஸ் தொற்றை விட 20 மடங்கு கொடிய வைரஸ் குறித்து உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் எச்சரிக்கை விடுத்துள்ளார். 'Disease X' என்று இதற்குத் தற்காலிகமாகப் பெயரிடப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகள் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தத் தொற்று மக்களுக்கு நோயை ஏற்படுத்தும் திறன் கொண்ட 25 வைரஸ் குடும்பங்களில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்.

2018 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தால் புதுப்பிக்கப்பட்ட நோய்களின் பட்டியலில் 'Disease X' இணைக்கப்பட்டுள்ளது. இது கொரோனாத் தொற்றைவிட 20 மடங்கு மிகவும் ஆபத்தானது என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இதனால் எந்த ஆபத்தும் இல்லை. ஆனால், எதிர்காலத்தில் வெளிப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சாத்தியமான அச்சுறுத்தல்களுக்குத் தயாராக இருக்குமாறு உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"தெரியாத விடயங்கள் நடக்கலாம், எப்போதும் எதுவோண்டுமானாலும் நடக்கலாம். அதனால் நமக்குத் தெரியாத நோய்களுக்கு ஒரு ஒதுக்கிடத்தை நாம் வைத்திருக்க வேண்டும்" என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதற்கான உலகளாவிய ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகெங்கிலும் உள்ள நாடுகள் ஒன்றிணைந்து கொடிய X நோயை எதிர்த்துப் போராட ஒரு தொற்றுநோய் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாக இயக்குநர் குறிப்பிடுகின்றார்.

உலகப் பொருளாதார மன்றத்தில் உரையாற்றிய அதினோம் கெப்ரேயஸ், இந்த ஆண்டு மே மாதத்துக்குள் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

னுளைநயளந ஓ ஒரு குறிப்பிட்ட நோய் அல்ல என்றும், கொரோனா போன்ற ஒரு சாத்தியமான வைரஸ் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் ஆகவோ, பாக்டீரியாவாகவோ அல்லது பூஞ்சையாகவோ இருக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் மனிதர்களுக்குக் கடுமையான நுண்ணுயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும்.

"இந்தச் சாத்தியமான அச்சுறுத்தலை 'Disease X' என்று பெயரிடுவது, தடுப்பூசிகள் அல்லது மருந்து சிகிச்சைகள் இல்லாத ஒரு நோயைக் கையாள்வதற்கான தயாரிப்புகளுக்கு முன்னுரிமை அளிப்பதாகும். மேலும், இது கடுமையான தொற்றுநோய்க்கு வழிவகுக்கும்" – என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.






# சிறீதரனை வாழ்த்திய பிள்ளையான்!

“இலங்கைத்தமிழரசுக்கட்சியின்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்” – என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“நீண்ட நெடிய அரசியல் வரலாற்றைக் கொண்ட எம் சமூகத்தின் பழம் பெரும் கட்சி ஒன்றுக்குத் தலைமை ஏற்றிருக்கும் தங்கள் பயணம் வெற்றுக் கோஷ சித்தாந்த அரசியலுக்கப்பால் தமிழ் மக்களின் நிலம், நிர்வாகம், உரிமை மற்றும் இருப்பு சார்ந்து வெற்றியடைய வேண்டும் என விரும்புகின்றேன்.

மேட்டுக்குடிகளின் நலன்களுக்கு அப்பால் ஒடுக்கப்படும் அடிமட்ட சாமானிய மக்களின் நலன் பேணும் தலைமையாகத் தங்கள் வரலாற்றுப் பாத்திரமானது புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்.



மனமார்ந்த வாழ்த்துக்கள்!” – என்றார்.

# மதுரங்குளி களப்பு பிரதேசத்தில் இனந்தெரியாத ஆணின் சடலம்






(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – மதுரங்குளி களப்பு பிரதேசத்தில் இருந்து இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று நேற்றுப் பகல் மீட்கப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்ற பொலிஸாரும், புத்தளம் தடவியல் பொலிஸாரும் இணைந்து விசாரனைகளை மேற்கொண்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் தொடர்பில் இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு களப்பு பகுதியில் இருந்து மீட்கப்பட்ட சடலம், நீதிவான் விசாரனையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு அனுப்பபட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# மல்லாகம் பெரியதம்பிரான் வருடாந்த உற்சவம் ஆரம்பம்

வரலாற்று பிரசித்தி பெற்ற மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் 3 ஆம் நாள் உற்சவம் நேற்று முன்தினம் மாலை வெகுசிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பெரிதம்பிரான் பெருமான் உள்வீதி, வெளிவீதி வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

இவ் 3ஆம் நாள் உற்சவத்தில் பெருமளவிலான அடியவர்கள் கலந்துகொண்டு பெரியதம்பிரானின் அருள் கடாசத்தினை பெற்றுக்கொண்டனர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாதங்களுக்கு முன்னர் ஆரம்பமான கையோடு, இந்த விடயம் அரங்கேறி யது.

இது குறித்த செய்திகளை முதலில் வெளிப்படுத்தியது இந்தப் பத்திதான். பல ஊடகங்களும் அது குறித்து அடக்கி வாசித்தன. அந்த விடயத்தை அம்பலப் படுத்துவதில் உள்ள ஆபத்துக் குறித்து உணர்ந்து, மௌனம் பேணி, பல தரப்பு கள் தங்களைத் தாங்களே திருப்திப்படுத் திக் கொண்டன.

இப்போது அதற்கு அடுத்த கட்டத் தகவல்:-

போதைப் பொருள் கடத்தல் விவகா ரத்தில் பெருந்தொகை போதைப் பொரு ளுடன் கைதான இந்தப் பிரமுகர் பற்றிய தகவலை மூடி மறைத்த பொலிஸ் வட்டா ரங்கள், இப்போது ஏதோ ஒரு முறையில் அவர் பிணையில் வெளியே வந்த செய்தி யையும் மூடி மறைத்துள்ளனர்.

வெளியே வந்த அவர், தமது குடும்ப ஊடகத்தின் பொங்கல் நிகழ்வில் ஆடிப்பாடி மகிழும் படமும் எங்களுக் குக் கிடைத்தது.

போதைப் பொருள் வர்த்தகத்துக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை என்று தெற்கில் படம் காட்டும் பொலிஸ், இக் கடத்தல்காரை இப்படிக் குறுகிய காலத் தில் பிணையில் - வெளியில் - விட் டமை எங்ஙனம் என்பதும் இன்னும் புரியவில்லை.

---

## தீர்வுக்கு இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற பெயரில் இலங்கை விட யத்தில் தலையிட்டு, அதே காரணத்தின் அடிப்படையில் இலங்கையுடன் தனது புவியியல் நலனையும் உறுதிப்படுத்தும் சர்வதேச ஒப்பந்தத்தையும் திணித்த இந் தியா, அதனடிப்படையில் ஒரு இலட்சத் துக்கும் மேற்பட்ட தனது துருப்புகளை அமைதிப் படை என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புப் படையாக இறக்கி, தமிழர் தேசம் மீது இரண்டரை ஆண்டுகள் கொடூர யுத்தத்தை நடத்தி, பேரழிவை ஏற்படுத்தித் தனது ஒப்பந்தத் தின் அடிப்படையில் 13 ஆவது திருத்தம் மூலம் மாகாண சபை என்ற அரைகுறைத் தீர்வை திணிக்க முயன்றது.

இந்தத் தீர்வை புதிய - சாதாரண - சட் டம் மூலமே இலங்கை ஊதித் தள்ளி விடும் என்பதால் அதை ஏற்க முடியாது என மறுத்த தமிழர் தரப்பின் பிரதிநிதி களான தமிழீழ விடுதலைப்புலிகளை நேரடியாக இராணுவ ரீதியில் அழிக்க முயன்றது இந்தியா. அது முடியாமல் கையைச் சுட்டுக் கொண்ட அந்நாடு, பின் னர் பிற தரப்புகளுடன் சேர்ந்து புலிகளை அழிப்பதில் வெற்றி கண்டது.

புலிகள் முன்னரே எதிர்வு கூறியபடி சாதாரண ஒரு சட்டம் மூலமே 13 ஆம் திருத்தத்தின் கீழான மாகாண சபைகள் அனைத்து மக்கள் பிரதிநிதித்துவத்தை முழுமையாக இழந்து, ஐந்து வருடங் களாக நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் வந்து விட்டது.

அதைக் கூட சீர்செய்ய வக்கற்றுக் கையை விரித்திருக்கும் இந்தியா, இப் போது தமிழர் ஒற்றுமையின்மை மீது சாட்டைச் சுமத்தி நழுவப் பார்க்கின் றது.

தமிழ்ப் போராளிகள் தங்களுக்குள் ஆயுதமுனையில் நேரடியாக மோதி யுத் தம் புரிந்து கொண்டிருக்கையில், அந்த யுத்தத்துக்கு மத்தியில் இடையில் புகுந்து தனது நலனில் அடிப்படையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் செய்து, அதைத் தமிழர் தேசத்தின் மீதும் வல்வந்தமாகத் திணித்த புதுடில்லி, இப்போது அதன் நடைமுறையாக்கத்தைச் செயற்படுத்த தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையீனமே காரணம் என்ற சாக்கில் கயிறு விடுகின் றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதி நிதிகள் ஆகியோருக்கும் இந்தியத் தூது வருக்கும் இடையில் நேற்று சந்திப்பு நடைபெற்றது. கொழும்பில் உள்ள இந்தியன் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே இந்தியத் தூதுவரின் கருத்தில் மேற்கண்ட தொனி தென்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மீளிணைக்கப்பட வேண்டும், அதிகாரம் பகிரப்பட்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், தேர்தல் நடத்தப்படாவிட்டால், திரும்பத் திரும்ப நாம் உங்களிடம் இப்படி முறை யிட்டுக் கொண்டிருப்பதை விட வேறு வழியில்லை என்று தமிழ்த் தரப்புக்கள் இந்தச் சந்திப்பில் தெரிவித்தன.

முல்லைத்தீவில் மகாவலி திட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் பூர்வீக நிலத்தில் 600 சிங்களக் குடும்பங்களைக் குடியமர்த் தத் திட்டமிடப்படுகின்றது, திருகோண மலையில் மெகா சிட்டி திட்டத்தை முன்னெ டுப்பதாகக் கூறி இந்தியாவைத் தவிர்த்து பிற நாடுகளை உள்ளீர்க்கும் முயற்சி நடக்கின்றது, மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை பெரும்பான்மை இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றது, பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப் பட வேண்டும் உள்ளிட்ட பல விடயங்க ளைத் தமிழ்த் தரப்புக்கள், புதிய இந்தியத் தூதுவரிடம் சுட்டிக்காட்டின.

"இலங்கை பொருளாதார நெருக்கடி யில் சிக்கியுள்ள சமயத்தில் இந்தியா நிதி உதவி வழங்கியது. தற்போது தேர்தல் நடத்தப்பணமில்லைஎன்றுஅரசுகூறுகின் றது.தேர்தலைநடத்தஇந்தியாபணம்வழங் கலாம்" - என்றும் தமிழ்க் கட்சிகள் யோசனை முன்வைத்தார்கள்.

இந்தியத் தூதுவர் மேற்படி விடயங்க ளைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அபிவிருத்தித் திட்டங்களுடன், அரசி யல்தீர்வையேஇந்தியாஇலக்காகக்கொண் டுள்ளது என்று அவர் தெரிவித்தார். இந் தியாவிலிருந்து கடலடி மார்க்கத்தில் மின் சாரம் கொண்டு வரும் திட்டம் முன் னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மீளிணைப்பு, தேர் தல், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விவ காரங்களில் இந்தியா இன்னும் அதிக வகிபாகத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் வலியுறுத் தின.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூது வர், "இந்தியாவும், சர்வதேசமும் இலங் கையிடம் இவற்றைச் சொல்லத்தான் முடியும். இந்தியா தொடர்ந்தும் இதை வலி யுறுத்தி வருகின்றது. ரணில் விக்கி ரமசிங்க இந்தியா வந்தபோது, பிரத மர் நரேந்திர மோடி மூடிய அறைக்குள் இந்த விடயங்களை வலியுறுத்தினார். பின்னர் பகிரங்கமாகவும் சொன்னார். இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும்" - என்றார்.

"உங்கள் வலியுறுத்தல் மிகவும் கனதி யாக இருக்க வேண்டும்" - என்று இதன் போது தமிழ்த் தரப்புக்கள் தெரிவித் தன.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூது வர், "நீங்கள் (தமிழ்த் தேசியக் கட்சிகள்) ஒற்றுமையாக இருந்தால் இலங்கை அரசுக்கு வலுவாக அழுத்தம் கொடுத்து எந்தவொரு தீர்வையும் நீங்களாகவே பெற்றுக்கொள்ள முடியும். எனவே, உங்க ளுக்கிடையில் ஒற்றுமை மிகவும் அவசி யம்." - என்றார்.

மாலை 4 மணியளவில் ஆரம்பித்த சந்திப்பு 5.45 மணியளவில் முடிவடைந் தது.

---

## சம்பந்தன், கஜேந்திரகுமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., அக்கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா.சாணக்கி யன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் எம்.பி., ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர். எல்.எப்.) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்தி ரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பொதுச்செயலாளர் கோவிந் தன் கருணாகரம் எம்.பி., அந்த அமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி., தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித் தார்த்தன் எம்.பி., தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோர் மேற்படி சந்திப்பில் பங்கேற்கவில்லை. மூன்று தலைவர்களும் கலந்துகொள்ளா மைக்கான காரணங்களை அறியமுடிய வில்லை.

---

## சிறீக்கு ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரனுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள் ளார்.

அணிசேரா மாநாட்டுக்காக உகண்டா வின் தலைநகர் கம்பாலாவில் தற் போது ரணில் முகாமிட்டுள்ளார். தமிழ ரசுக் கட்சியின் தலைமைப் பதவி தொடர் பான தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவ ருக்கு நேற்றுமுன்தினம் தெரியப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்தே சிறீதரனுக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணி யளவில் தொலைபேசி அழைப் பெடுத்து அவர் வாழ்த்துத் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, அமைச்சர்கள், பெரும் பான்மைக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்களும் சிறீதரனு-க்குத் தமது வாழ்த்தைத் தெரிவித்துள்ள னர்.

அதேவேளை, தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவான விட யத்தை தென்னிலங்கையின் பத்திரிகை களும், இணைய ஊடகங்களும் முக்கி யத்துவம் கொடுத்து வெளியிட்டிருந் தன..




# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஆட்சேபித்து மட்டக்களப்பில் பேரணி

(பழுவூரான்)

அரசினால் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கல்லடிப் பாலத்தடியிலிருந்து ஆரம்பமான எதிர்ப்புப் பேரணி காந்திப் பூங்கா வரை அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

பேரணி மட்டக்களப்பு காந்திப் பூங்காவைச் சென்றடைந்ததைத் தொடர்ந்து அங்கு வருகை தந்திருந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவிடம் மேற்படி சட்டத்தை நீக்கக் கோரும் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் காந்திப் பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடை பொலிஸாரால் அகற்றப்பட்டது. எனினும் சிவில் சமூக ஏற்பாட்டாளர்களும் பொதுமக்களும் இணைந்து மேடை அமைக்கப்பட்ட இடத்திலேயே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களின் போராட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மேலும் படங்கள் 7ஆம் பக்கத்தில்...)














# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஆட்சேபித்து மட்டக்களப்பில் பேரணி










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கூட்டமைப்பும் சிறீதரனும்

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வந்து 14 வருடங்களுக்குள் கட்சியின் தலைவராகும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தனது தலைமைத்துவப் பயணத்தை கலகலப்பாக ஆரம்பித்திருக்கின்றார். துயிலும் இல்லத்துக்குப் போய் மாவீரர் தூபிக்குக் கார்த்திகைப் பூவால் அர்ச்சித்துத் தமது தமிழ்த் தேசியப் பற்றைப் பறைசாற்றிய சிறீதரன் தமிழ்த் தேசியம் தொடர்பான தமது அடுத்த கட்ட நகர்வையும் அறிவிப்பாக வெளியிட்டிருக்கின்றார்

"2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறிருந்ததோ அவ்வாறான நிலையை - தமிழ் மக்களின் அரசியல் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலையை - அது எய்த வேண்டும். எனவே, தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ்க் கட்சிகளும், தம் கட்சிகளின் நலனை முன்னிறுத்தாமல், மக்கள் நலனை முன்னிறுத்தி, தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஒரணியாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக - ஒன்றிணையுமாறு அழைக்கின்றேன்." - என்று அவர் பகிரங்க அழைப்பு விடுத்திருக்கின்றார்.

"தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது பெரு விருப்பம். அதனை முன்னிறுத்தியே தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் நின்று, இப்போது தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இந்த நிலையில் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புத்துயிரூட்டுவதே என் முன்னுள்ள முதற்பணியென எண்ணுகின்றேன்."

"தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகக் குரல் கொடுத்த - மக்களுக்காக அரசியல் பணி செய்த - சக தமிழ்த் தேசியக் கட்சிகள் சிலபல காரணங்களால் பிரிந்து தனிவழியே பயணிக்கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது. அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் கூட்டமைப்பு எப்படி தமிழ் மக்களின் அசைக்க முடியாத சக்தியாக மிளிர்ந்ததோ, அதே நிலையை மீண்டும் எட்ட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெருவிருப்பம். எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்காக அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளையும் கடந்தகால கசப்பான நினைவுகளைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்." - என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

"சகல தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டைத் துரித கதியில் முன்னெடுக்கவுள்ளேன். அதன் மூலம் மக்களின் உரிமைகளையும், மாவீரர்களின் கனவுகளையும் வென்றெடுப்போம்." - என்றும் அவர் அறிவித்திருக்கின்றார்.

நல்ல விடயம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குவதற்கு அண்மை காலம் வரை ஒற்றைக் காலில் நின்ற தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜாவினால் அதைச் செய்ய முடியாமல் போய்விட்டது. அதனை சிறீதரன் இப்போது செய்ய விழைகின்றார்.

உண்மையாக அந்த எண்ணத்தில் இருந்த மாவை சேனாதிராஜா அதைச் செயற்படுத்த முடியாமல் இருந்தமைக்கு யார் காரணம் என்பதை மக்கள் அறிவர்.

இப்போது சிறீதரனுடன் கட்சித் தலைமைத்துவத்திற்குப் போட்டியிட்ட சுமந்திரன், தேர்தலில் தோல்வியுற்றுள்ளமையால் கட்சிக்குள் அவர் ஒதுக்கப்பட, இந்த விவகாரத்தை சிறீதரன் முன்னெடுத்துச் செல்ல விழைகின்றார் என்ற படம் காட்டப்படப் போகின்றது. ஆக, கூட்டமைப்பு 2009 இல் இருந்த நிலைமை குன்றியதற்குக் காரணம் சுமந்திரன், அவரை ஒதுக்கிவிட்டு நமது கட்சியின் புதிய தலைவர் அதைச் சாதிக்க முன் வந்திருக்கின்றார் என்ற படம் காட்டப்படப் போகின்றது

உள்ளூராட்சித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் வேட்பாளர் தெரிவுக்குப் பொறுப்பாக இருந்த இதே சிறீதரன் கூட்டமைப்புப் பங்காளிகளுக்கு எவ்வாறு கௌரவமாக இடமளித்தார் என்பது தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு நல்ல அனுபவம் உண்டு. ஆகவே தமிழரசின் புதிய தலைவரின் இந்த அழைப்பை அதற்குரிய தகுதி நிலையோடு அணுகி, அவர்கள் முடிவெடுப்பர் என்பது நிச்சயம்.

தமிழ்க் கூட்டமைப்புக்குத் தனியான சின்னம் இருக்க வேண்டும், அது தனிக் கூட்டுக் கட்சியாகப் பதிவு செய்ய்ப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் எல்லாம் பங்காளி கட்சிகளுக்கு உண்டு. அவற்றில் அவை இப்போது விடாப்பிடியாக இருக்கின்றன. தமிழரசு கட்சி அதில் இவ்வளவு காலமும் விட்டுக் கொடுப்பைக் காட்டாதமைதான் இவ்வளவு இழுபறியும் ஏற்படக் காரணம். இப்போது அந்த நிபந்தனைகளுக்கு இணங்கி, விட்டுக் கொடுத்து, பங்காளி கட்சிகள் இறங்கி வருவது துர்லபமே.

எனினும் அந்த நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கு தமிழரசுக்குள் மறுத்து நின்ற சுமந்திரன், சிரேஷ்ட துணைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் போன்றோர் தலைவர் தெரிவின் போது சிறீதரனுக்கு மாறாக நின்றவர்கள். இவர்கள், சிறீதரனின் வெற்றியை அடுத்து கட்சிக்குள் ஓரங்கட்டப்படும் நிலைமை உள்ளது. ஆகவே அவர்கள் இல்லாத அரசியல் குழு, மத்திய குழு போன்றவற்றை புதிய தலைவர் சிறீதரன் தனக்கேற்ப கையாண்டு, பங்காளிக் கட்சிகளின் நிபந்தனைகளுக்கு மண்டியிட்டு, மீண்டும் கூட்டமைப்பைப் பலம் பொருந்திய தாக்கி தமிழ்த் தேசியத்தை வளர்ப்பார் என்று நம்புவோமாக.

இன்னொரு விடயமும் உண்டு. தமிழ் கூட்டமைப்பு ஒன்றாக இருந்தால்தான் பங்காளி கட்சி தலைவர்களின் ஆதரவுடன், இனி வரக்கூடிய மாகாண சபை தேர்தலில் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் நியமனம் பெறலாம் என்று மாவை சேனாதிராஜா கடைசி வரை கனவு கண்டார். இப்போது அந்தத் தலைவர் பதவி சிறீதரனிடம். மாவையரின் வாய்ப்பு இனி சிறீதரனுக்கு. கூட்டமைப்புக்கு மீள உருக்கொடுக்கும் விடயத்தில் சோழியன் குடும்பி சும்மா ஆடவில்லை என்பது போன்றே தோன்றுகின்றது.



# ‘யுக்திய’ நடவடிக்கை எதிராக போர்க்கொடி தூக்கும் ஐ.நா.

“யுக்திய“ என்று அழைக்கப்படும் நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்தி அது குறித்து மறுபரிசீலனை செய்து மனித உரிமைகளின் பிரகாரம் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை அதிகாரிகளுக்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இலங்கையில் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் இராணுவத்தின் வலுவான அணுகுமுறை இருக்கின்றது எனக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

போதைப்பொருள் பாவனையாளர்களுக்கும் மனித உரிமைகள் உள்ளன. அவர்கள் பாகுபாடு மற்றும் களங்கம் இல்லாமல் ஒரு கண்ணியமான வாழ்க்கையை வாழ தகுதியானவர்கள்.

ஓரங்கட்டப்பட்ட சமூக – பொருளாதார குழுக்களில் இருந்து ஆயிரக்கணக்கான போதைப்பொருள் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் நூற்றுக்கணக்கானோர் இராணுவத்தால் நடத்தப்படும் கட்டாய புனர்வாழ்வு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது.

“யுக்திய“ எனப்படும் பாதுகாப்பு நடவடிக்கையின் போது சித்திரவதை மற்றும் மோசமாக நடத்தப்பட்ட செயற்பாடுகள் குறித்து மனித உரிமைகள் சபைக்கு முறைப்பாடுகள் அளித்துள்ளனர்.

மறுவாழ்வு என்பது தீங்கு குறைக்கும் கண்ணோட்டத்தில் செய்யப்பட வேண்டும். கட்டாய மறுவாழ்வு மையங்கள் உடனடியாக மூடப்பட்டு, வெளிப்படைத்தன்மை வாய்ந்தவையாக அவை மாற்றப்பட வேண்டும். அதற்குப் பதிலாக தன்னார்வ புனர்வாழ்வுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.” – என்றுள்ளது.

போதைப்பொருள் தொடர்பான குற்றவாளிகளுக்குப் புனர்வாழ்வு அல்லது நடவடிக்கைகள் எடுக்கப்படும் இலங்கை சட்டம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் சபை கவலையையும் வெளிப்படுத்தியுள்ளது.

# உள்ளூர் ஆயுத உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு

## ஆயுதங்களுடன் மூவர் கைது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரத்தில் உள்ளூர் ஆயுதங்கள் தயாரிக்கும் நிலையமொன்றை விசேட அதிரடிப் படையினர் முற்றுகையிட்டுள்ளதுடன் மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.

திருக்கோவில் விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்தப் பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி ஒன்றும், இரும்புக் குழாய்கள் மூன்றும், இரும்பு வெட்டும் இயந்திரம் ஒன்றும், ஒட்டி உருக்கும் இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று திருக்கோவில் விசேட அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரி வருண ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 34, 42 மற்றும் 54 வயதுக்குட்பட்ட திருக்கோவில் மற்றும் கஞ்சிக்குடிச்சாறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் திருக்கோவில் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.


# அயோத்தி ஸ்ரீ இராமர் ஆலயத்தின் பிரதிஷ்டை சிறப்பாக இடம்பெற்றது











அயோத்தி ஸ்ரீ இராமர் திருக்கோவிலில் பிராண பிரதிஷ்டை விழா பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் வெகுவிமரிசையாக நேற்று இடம்பெற்றது.

பிரதமர் நரேந்திர மோடி, உத்தர பிரதேஷ் முதல்வர் யோகி ஆதித்யநாத், ஆர்.எஸ்.எஸ். எனப்படும் ராஷ்டிரிய ஸ்வயம் சேவக சங்கத்தின் தலைவர் மோகன் பகவத் ஜீ, உத்தர பிரதேஷ் ஆளுநர் ஆனந்தி பென் பட்டேல் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

சாது, சந்நியாசிகளின் மந்திர பாராயணத்துடன் பக்தர்களின் ராம மந்திர முழக்கம் வானைப் பிளக்க நேற்று பகல் 12.30 அளவில் பிராண பிரதிஷ்டை விழா இனிதே இடம்பெற்றது.

பிராண பிரதிஷ்டை நடைபெறும்போது ஹெலிகொப்டர் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

51 அங்குல உயரம் கொண்ட ராம் லல்லா எனப்படும் பால இராமரின் திருவுருவச் சிலைக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றதை தொடர்ந்து, அயோத்தியின் பிரதிஷ்டை விழா இடம்பெற்றது.

ஸ்ரீபால இராமர் சிலையின் மீது வருடாந்தம் ராம நவமியன்று சூரிய ஒளி விழுவது போன்று வடிவமைக்கப் பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் தேவ கவுடா, சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், நடிகர்களான ரஜினிகாந்த், அமிதாப் பச்சன், சிரஞ்சீவி, ஜெக்கி ஷெரோஃப் உள்ளிட்டோரும் விழாவில் பங்கேற்றிருந்தனர்.

இவர்களை தவிர சச்சின் டெண்டுல்கர், அனில் கும்ப்ளே உள்ளிட்ட முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் விழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்று காலை முதல் நடைபெற்ற ஸ்ரீ இராமர் பக்தி சங்கீர்த்தனத்தில் பாடகர்களான சங்கர் மகாதேவன், சோனு நிகம் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

# ‘ராம ஜோதியை ஏற்றி குழந்தை ராமரை வரவேற்பீர்’: நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள்



பிராணப் பிரதிஷ்டை விழாவை முன்னிட்டு ராம ஜோதியை ஏற்றிக் குழந்தை ராமரை வரவேற்குமாறு பிரதமர் மோடி மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக தனது எக்ஸ் தள பக்கத்தில்,

“குழந்தை ராமர் அயோத்தி தாமில் உள்ள தமது பிரமாண்டமான ஆலயத்தில் அமர்ந்துள்ளார்.

இந்தப் புனிதமான சந்தர்ப்பத்தில், ராம ஜோதியை ஏற்றி, தங்கள் வீடுகளிலும் அவரை வரவேற்குமாறு நாட்டு மக்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஜெய் ஸ்ரீராம்.” என்று பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

அத்துடன், தான் ராம ஜோதியை ஏற்றியுள்ள புகைப்படத்தையும் பிரதமர் மோடி பகிர்ந்துள்ளார் .

முன்னதாக, அயோத்தி ராமர் கோயில் பிராண பிரதிஷ்டை விழா நேற்று வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. பிராண பிரதிஷ்டை விழாவையொட்டி அனைவரின் வீடுகளிலும் தீபம் ஏற்றிக் கொண்டாட முன்னணி இந்து அமைப்புகள் நாட்டு மக்களை கேட்டுக்கொண்டனர்.

அனைவர் வீடுகளிலும் மாலை கார்த்திகை தீபம்போல் அகல் விளக்குகளில் தீபமேற்றி ஒளி வெள்ளத்துடன், ராமரைப் போற்றி வணங்குவோம் என பா.ஜ.க. தலைவர்களும் அழைப்பு விடுத்திருந்த நிலையில் தற்போது பிரதமர் மோடியும் நாட்டு மக்களுக்கு ராம ஜோதி ஏற்ற வலியுறுத்தியுள்ளார்.

# சீனாவின் தென்மேற்கில் நிலச்சரிவு: 47 பேர் மண்ணுக்குள் புதைந்தனர்



சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யுனான் மாகாணத்தில் நேற்று ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி, 47 பேர் மண்ணுக்குள் புதைந்துள்ளனர்.

இந்த நிலச்சரிவில் 10 இற்கும் மேற்பட்ட வீடுகளை சேர்ந்த 47 பேர் மண்ணுக்குள் புதைந்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம் ஏற்பட்ட பகுதியில் இருந்து 500 இற்கும் மேற்பட்டோரை மீட்புக்குழுவினர் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து சென்றுள்ளனர்.

கடந்த சில நாள்களாக இந்த நகரில் கடும் குளிருடன் மோசமான வானிலை நிலவி வந்த நிலையில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லண்டனில் இஷா புயல் தாக்கம்: பலத்த மழையால் மக்கள் பாதிப்பு





பிரித்தானியா முழுவதும் எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் லண்டனில் பலத்த காற்று மற்றும் மழையுடன் இஷா புயல் தாக்கியுள்ளது.

இதற்கமைய, லண்டனில் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், ரயில் மற்றும் விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

பலத்த காற்று காரணமாக விமானங்கள் தரையிறங்க முடியாமல் திருப்பி விடப்பட்டன என தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக ரயில் சேவைகள் தாமதமாகலாம் என்றும், பல நிறுவனங்கள் சேவையை இரத்து செய்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, பர்மிங்காம் மற்றும் லண்டன் யூஸ்டன் இடையே ரயில்கள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் மற்ற வழித்தடங்களில் குறைந்த சேவைகள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

லண்டன் மற்றும் தென் கிழக்கின் சில பகுதிகள் தவிர பிரித்தானியாவின் அனைத்து பகுதிகளுக்கும் வானிலை அலுவலக எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு ஸ்காட்லாந்தின் சில பகுதிகளில் பலத்த காற்றுக்கு வாய்ப்பிருப்பதாக கூறி, சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



ஸ்காட்லாந்தின் ரயில் சேவை நிர்வாகம், அதன் அனைத்து அவசர நேர ரயில்களையும் இரத்து செய்துள்ளது.

# ரஷ்ய ஆக்கிரமிப்பு பகுதியில் குண்டு வீச்சு தாக்குதல்



உக்ரைன் – ரஷ்ய போர் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில் உக்ரைனில் ரஷ்ய படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் நகரில் சரமாரியாக பீரங்கி குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலில் பெண்கள், சிறுவர் கள் உட்பட 25 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த தாக்குதலை உக்ரைன் இராணுவம் நடத்தியதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

எனினும் உக்ரைன் இராணுவம் இது குறித்து உடனடியாக கருத்து தெரிவிக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.




# சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது மீளாய்வு மார்ச்சில்

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது மீளாய்வு எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் தவணையை விடுவிக்க முடியும் என ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வற் அறவிடப்படும் வர்த்தகர்களிடமிருந்து கட்டாயமாக அவர்களின் வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சிலர் அரசாங்கத்திற்கு வரி செலுத்தாது, அதிகரிக்கப்பட்டுள்ள வரியை தமது இலாபமாக வைத்துக்கொள்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# முன்னாள் ஜனாதிபதியின் மகளின் வீட்டில் திருட்டு!

## விசாரணைகள் ஆரம்பம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்துரிக்கா சிறிசேனவுக்கு சொந்தமான பத்தரமுல்லை – விக்கிரமசிங்கபுர பகுதியில் உள்ள வீட்டில் பணம் மற்றும் சொத்துக்கள் சூறையாடப்பட்ட சம்பவம் தொடர்பில், பொலிஸ் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுமார் 29 லட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் சொத்துக்கள் அபகரிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் தெரிவித்துள்ளது.

கடந்த 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அலுமாரியில் இருந்த பணம், தங்க ஆபரணங்கள், ஸ்மார்ட் கடிகாரங்கள் உள்ளிட்ட பல பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன என முறைப்பாடளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இருபது வீதத்துக்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்

## சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண தகவல்



"இலங்கையில் 91 வீத குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. தட்டம்மை நோய் இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த காலங்களில் தட்டம்மை நோய் மீண்டும் தலைதூக்கியதையடுத்து, இவ்வாறான தடுப்பூசித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதே இந்த ஆண்டின் முக்கிய எதிர்பார்ப்பாகும். ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு மிகவும் தரமான சேவையை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. தொற்றா நோய்கள் தொடர்பில் இலங்கை பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது.

இருபது வீதத்துக்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்காசிய பிராந்தியத்தில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் அதிகளவில் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உள்ள நாடாகவும் இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயர் இரத்த அழுத்தம் தொடர்பான சிக்கல்களில் இதய நோய் மற்றும் பக்கவாதம் போன்ற பல நோய்கள் அடங்குகின்றன.

மேலும், வேகமாக முதுமையடையும் மக்கள் தொகை கொண்ட நாடென்ற வகையில், நினைவாற்றல் குறைபாடு, கண் நோய்கள், எலும்பு நோய்கள் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன.

எனவே, தொற்றாத நோய்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி பல்வேறு வேலைத்திட்டங்களைநடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வேகமாக பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் ஆதரவு கிடைத்துள்ள போதிலும், இது தொடர்பாக பொதுமக்களின் ஆதரவு இப்பொழுதுள்ளதை விடவும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தற்போது அதிகரித்து வரும் தட்டம்மை நோயைத் தடுக்க பல்வேறு விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளோம். கடந்த சில வாரங்களில், 91 வீத குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை ஏற்ற முடிந்தது.

அத்துடன், தற்போதுள்ள மருந்துப் பற்றாக்குறையை போக்குவதற்கு பெருமளவிலான அத்தியாவசிய மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மருந்து தட்டுப்பாடு படிப்படியாக குறைந்து வருகிறது என்றே கூற வேண்டும். எதிர்காலத்தில், மருத்துவ விநியோகத் துறையையும், கொள்முதல் செயல்முறையையும் வெளிப்படையானதாக மாற்ற ஒன்லைன் முறையைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்காக ஏற்கனவே மொரட்டுவை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் கணினி துறைகளுடன் சுகாதார அமைச்சு கலந்துரையாடி வருகிறது."

– என்றார்.



# இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் 5,000 பேரின் பதவி விலகல் கடிதங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்

## மின்சாரசபை நிர்வாகத்துக்கு அமைச்சர் உத்தரவு

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் 5,000 பேர் பதவி விலக தீர்மானித்துள்ளனர் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், எவ்வித தயக்கமும் இன்றி பதவி விலகல் கடிதங்களை ஏற்றுக் கொள்ளுமாறு இலங்கை மின்சார சபை நிர்வாகத்திற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உத்தரவிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

"எந்த ஓர் ஊழியரின் இராஜினாமாவையும் தயக்கமின்றி ஏற்கும்படி இலங்கை மின்சாரசபை நிர்வாகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை இராஜினாமா செய்பவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்துப் பாக்கிகளையும் வசூலிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் சீர்திருத்தங்கள் தொடர்பான பணிகளை துரிதப்படுத்துமாறு மின்சாரசபை நிர்வாகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தங்களில் செலவு குறைப்பு வழிமுறைகள், உற்பத்தித் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மின் திட்டங்களை செயல்படுத்துதல், டிஜிட்டல் கட்டணத் தளத்தை விரிவுபடுத்துதல் என்பன உள்ளடங்குகின்றன.

இந்த வருடம் ஜனவரி மாதம் இடம்பெற்ற அடையாள வேலைநிறுத்தத்தின் போது இலங்கை மின்சார சபையின் சேவைகளுக்கு இடையூறு விளைவித்த பணியாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது." – என்றார்.

சுமார் 5,000 மின்சாரசபை ஊழியர்கள் ஒரே நேரத்தில் இராஜினாமா செய்யத் தயாராகி வருகின்றனர் என்று வெளியாகியுள்ள செய்தியின் அடிப்படையில் அமைச்சரால் இந்த புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஊழியர்களை அடக்குவதற்கு அமைச்சின் முயற்சிக்கு எதிராக மின்சாரசபை தொழிற்சங்கக் கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பதில் பாதுகாப்புச் செயலராக சமன் திஸாநாயக்க நியமனம்

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரான சமன் திஸாநாயக்க பதில் பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு செயலாளர் நாயகம் கமல் குணரத்ன நாடு திரும்பும் நாள் வரை அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரயிலிலிருந்து வீழ்ந்து வெளிநாட்டவர் காயம்

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி சென்ற ரயிலில் இருந்து தவறி வீழ்ந்த வெளிநாட்டவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஒஹிய ரயில் நிலையத்தில் இந்த அனர்த்தம் நேற்றுப் பிற்பகல் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர் ஈரான் நாட்டைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

அவர், சிகிச்சைகளுக்காக தியத்தலாவை வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.





# தேர்தல்கள் உரிய காலத்தில் இடம்பெறும் ஜேர்மன் தூதுவரிடம் நீதி அமைச்சர் உறுதி

"இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெறவுள்ளன. அத்துடன் லஞ்சம் மற்றும் ஊழலை கட்டுப்படுத்த தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதி, சிறைச்சாலை நடவடிக்கை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி பீலிக்ஸ் நியூமான் ஆகியோருக்கிடையில் நேற்று நீதி அமைச்சில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போதே நீதி அமைச்சர் விஜேதாஸ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், காணாமல்போனவர்கள் தொடர்பில் ஆராயும் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு காரியாலயம் என்பன அமைக்கப்பட்டுள்ளன எனவும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை விரைவாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் அரசியல்வாதிகள் மீது விரல் நீட்டப்படுகிறது. அரசியல்வாதிகளை நாட்டு மக்கள் நிராகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான அரசமைப்பு திருத்தம், தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் ஊழல் ஒழிப்புச் சட்டம் போன்ற சட்ட திட்டங்கள் தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

இதன் ஊடாக ஊழல் மற்றும் சீர்கேடுகளற்ற இலங்கையை உருவாக்கும் அடிப்படை அடித்தளத்தை அமைத்திருப்பதாகவும் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நீதிமன்ற நடவடிக்கையை மிகவும் பலமிக்கதாகவும் விரைவாக செயற்படுத்துவதற்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் ஏனைய தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த வருடம் முடிவடையும்போது வழக்கு விசாரணைகள் தாமதமடைதல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப்பெறும் எனவும் அமைச்சர் ஜேர்மன் தூதுவருக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இலங்கையில் நீதிமன்ற நடவடிக்கை மற்றும் ஜனநாயகம் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதற்கு தேவையான எந்த ஒத்துழைப்பையும் வழங்குவதற்குத் தயார் என இதன்போது ஜேர்மன் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் பொருளாதார அரசியல் நிலைமை மற்றும் மக்களின் வாழ்க்கை நிலை இயல்பு நிலைக்கு வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்பதுடன், இலங்கை மற்றும் ஜேர்மன் நாடுகளுக்கிடையில் நீண்டகால தொடர்புகளை மேலும் அபிவிருத்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேவையான எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு உதவி செய்வதற்கு தான் அர்ப்பணிப்புடன் இருக்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் பணவீக்கம் டிசம்பரில் அதிகரிப்பு

2023 டிசம்பரில் நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புள்ளிவிவரங்களின் படி, 2023 டிசம்பரில் பணவீக்கம் 4.2 சதவீதமாக பதிவாகியுள்ளதாகவும் நவம்பரில் பணவீக்கம் 2.8 சதவீதமாக பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதேவேளை, 2023 நவம்பரில் 2.2 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் டிசம்பரில் 1.6 சதவீதமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

# நாட்டில் பொலிஸாரின் நடவடிக்கைகளினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கவலை



பொலிஸாரின் நடவடிக்கைகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது குறித்து இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் கவலை வெளி யிட்டுள்ளது.

அரசாங்கம் இந்த விடயம் குறித்து சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கைச் சட்டத் தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சில நாள்களிற்கு முன்னர் நாரம் மலவில் இடம்பெற்ற சம்பவத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச்செயல்களிற்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் விதம் குறித்து விமர்சனங்கள் வெளியாகி யுள்ள போதிலும், பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் டிரான் அலஸ் அதனை தொடர்வதில் உறுதிப்பாட்டை வெளிப் படுத்தியுள்ளார் எனவும் இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களிற்கு எதிராக அவசிய மான சட்ட அமுலாக்கல் நடவடிக்கை களை எடுக்கவேண்டியதன் அவசி யத்தை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், இவற்றை உரிய சட்ட நடைமுறைகளை இறுக்கமாக பின் பற்றி முன்னெடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

# தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதை தடுக்கக் கோரி பேராயர் மனுத் தாக்கல்

## 31ஆம் திகதி பரிசீலிக்கும் உயர் நீதிமன்றம்







பதில் பொலிஸ் மா அதிபரான தேச பந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதைத் தடுக்குமாறு கோரி கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண் டகை தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் 31 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பிரிதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர் தன ஆகிய மூவரடங்கிய உச்ச நீதி மன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, நீதிமன்றத்தில் நேற்றுத் தனது வாதங்களை முன்வைத்தார்.

இந்த நிலையில் இந்த மனுவை எதிர்வரும் 31 ஆம் திகதி பரிசீல னைக்கு எடுத்துக் கொள்வதற்கு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பெலியத்தையில் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டமை விசாரணக்கு ஆறு பொலிஸ் விசாரணை நியமனம்

பெலியத்தை பிரதேசத்தில் நேற்று காலை ஐவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக 6 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல் துவ தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழும் தென் மாகாண குற்றப் பிரிவு, தங்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவு, தங்காலை தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோரின் கீழும் இந்தப் பொலிஸ் குழுக்கள் நியமிக் கப்பட்டுள்ளன என அவர் தெரிவித் துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் இந்தப் பொலிஸ் குழுக்கள் உடனடியாக விசா ரணைகளை ஆரம்பித்துள்ளன என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஜனாதிபதி 17 மாதங்களுக்குள் 18 வெளிநாடுகளுக்கு விஜயம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகி கடந்த 17 மாதங்களில் 18 வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மக்கள் படும் இன்னல்களை கருத்திற்கொள்ளாது, மக்களின் வரிப் பணத்தில் நாட்டின் தலைவர் சவாரி செய்து வருகிறார் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை போதாமையினால், மேலும் 20 கோடி ரூபாயை அவர் ஒதுக்கியுள்ளார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, இயற்கையாக உருவான ஒன்றல்ல. அது திறமையற்ற மற்றும் ஊழல் நிறைந்த ஆட்சியின் காரணமாக உருவாக்கப்பட்ட நெருக்கடி என்றும், இது பொருளாதாரப் பயங்கரவாதம் செயல் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் முட்டாள்தனமான கொள்கைகளால் நாட்டை அழித்து வருகிறது. நட்பு வட்டார முதலாளித்துவத்தைப் பின்பற்றும் இந்த அரசாங்கம் மக்கள் சக்தியினால் விரட்டியடிக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.





# மலையக ரயில் சேவை பாதிப்பு

(செ.தி.பெருமாள்)

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை வரை இயங்கும் 1008 விரைவு ரயில் வட்டவளை மற்றும் கலப்பொட நிலையங்களுக்கு இடையில் தடம் புரண்டு உள்ளது. இதனால் மலையக மார்க்கத்தில் இயங்கும் அனைத்து ரயில் சேவைகளும் தாமதமாகி உள்ளன என ரயில்வேக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 23.01.2024




இன்று நடப்பவை அனைத்தும் சுமுக மாக இருக்கும். உங்கள் இலக்குகள் நிறைவேறுவதைக் காண்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இனிமை யாகப் பேசி பகிர்ந்து கொள்வதன் மூலம் மற்றவர்களை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

உங்கள் பணியை சிறப்பாக ஆற்றி பிரகாசிப்பீர்கள். உங்கள் திறமைகளைப் பணியில் வெளிப்படுத்துவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் உணர்வுகளை சிறப்பான முறையில் உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் விசேஷம் பற்றி உங்கள் துணையுடன் விவாதிப்பீர்கள்.

எதிர்பாராத வகையில் இன்று உங்களுக்கு பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இவ்வகையான பண வரவு உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப் பதற்கு உகந்த நாள் அல்ல. இன்று தைரி யம் குறைந்து காணப்படும். உங்கள் வளர்ச்சிக்காக மிகுந்த முயற்சி எடுக்க வேண்டியிருக்கும்.

நீங்கள் உங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். அதன் காரணமாக உங்கள் மேலதி காரிகளுடன் சில அசந்தர்ப்பமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ள மாட்டீர்கள். உங்கள் துணையிடம் உரையாடும் போது சில பிரச்சினைகள் உருவாகும்.

இன்று பண வளர்ச்சி சாதகமாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும்.

இன்று தோல்சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக் கப்படலாம்.




இன்று உங்களிடம் காணப்படும் அவநம்பிக்கை உங்கள்ஆற்றலை குறைக்கும்.உங்கள் நம்பிக்கைக்கு புத்துணர்ச்சி ஊட்டினால் சாதகமான பலன்களைக் காணலாம்.

அதிகப்படியான வேலையின் காரண மாக கவலைகள் ஏற்படும்.ஆரோக்கியக் குறைபாடு காரணமாக உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற முடியாது.

உங்கள் துணையுடனான உறவில் சில சிக்கல்கள் காணப்படும். உறவில் மகிழ்ச்சியைத் தக்க வைக்க உரையாடலின் போது வார்த்தைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் குறைவு. இன்று பணத்தைக் கவனமுடன் கையாள வேண்டும்.

மனதில் ஏற்படும் குழப்பங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




உங்கள் இலக்குகளை முடிப்பதற் கான சாதகமான சூழ்நிலைகள் இன்று அமையாது.நீங்கள் நம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் சமயோஜித புத்தி மூலம் இன்றைய நாளில் உங்கள் இலட் சியங்களை அடைய வேண்டும்.

அதிக வேலை காரணமாக சோர்ந்து போவீர்கள். எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைக் கவும். அவ்வாறு செய்வதன் மூலம் நல்ல வளர்ச்சியைக் காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நகைச்சுவையாக பேசுவதன் மூலம் நல்லிணக்கமான உறவு காணப்படும். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பணம் உங்களிடம் காணப்படாது.




இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்களுடைய பரந்த நோக்கு உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.உங்கள் சக பணியாளர்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். உங்களிடம் உள்ள பணம் உங்களுக்குத் திருப்தியை அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்றைய நாளை நீங்கள் உங்கள் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

குறித்த நேரத்தில் உங்கள் பணிகளை முடிப்பீர் கள். இன்று நீங்கள் வேலையில் பரபரப்புடன் காணப்படு வீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று ஒற்றுமையாக இருப் பீர்கள். வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இது உங்க ளுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படும். உங்கள் சொத்துக்களை விரிவு படுத்துவதற்கான வாய்ப்பு உள் ளது.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




உங்கள் செயல்களை ஆற்று வதில் இன்று சில தடங்கல்கள் ஏற்படும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.நேர்மறையான போக்கின் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேர லாம்.உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று செலவினங்கள் அதிகமாக காணப்படும். தேவையற்ற மற்றும் வீணான செலவுகளால் மனதில் கவலை ஏற்படும்.

இன்று அசௌகரியங்கள் காணப்படும். செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம். முதுகு வலிக்கு வாய்ப்புள்ளது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். கூடுதல் பொறுப்பு கள் காணப்படும். அதனால் உங்கள் நேரம் விரயமாகும். உங்கள் ஆற்றல் குறைந்து காணப்படும். நம்பிக்கை யுடன் செயலாற்றினால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று சவால்கள் நிறைந்திருக்கும்.குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. திறமையுடன் பணியாற்றத் திட்டமிடல் அவசியம்.

உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த உங்கள் துணையுடன் இனிமையாகப் பழகுங்கள். அன்பான வார்த்தைகள் மற்றும் மனம் திறந்த பேச்சுக்கள் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

இன்று பண வரவு காணப்பட்டாலும் உங்களால் சேமிக்க இயலாது.இன்று தேவையற்ற செலவினங்கள் அதிகமாக காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.01.2024

## தனுசு

இன்று சுமுகமான நாளாக இருக்கும். முயற்சியின் மூலம் இன்றைய நாளை சாதகமான நாளாக ஆக்கிக் கொள்ளலாம்.உங்களிடம் சிறந்த உறுதி காணப்படும்.

உங்கள் முயற்சி மூலம் இன்று பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையை நட்புடன் அணுகினால் உங்கள் இருவருக்குமான நெருக்கம் அதிகரிக்கும்.

நிதி வளர்ச்சி சீராக காணப்படும்.இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் திருப்தி அடைவீர்கள்.

## கும்பம்

இன்று சோம்பலான மனநிலையில் காணப்படுவீர்கள்.உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். குழப்பங்களை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயலாற்றுவது நன்மை தரும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் இன்று கிடைப்பது அரிது.

உங்களிடம் காணப்படும் குழப்பம் காரணமாக கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எனவே தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதிகம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

கண்களில் பாதிப்பு ஏற்படலாம். உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.

## மகரம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும் உங்களிடம் போதிய ஆற்றலும் உற்சாகமும் காணப்படும். மொத்தத்தில் அனைத்து விதத்திலும் சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். பணிகளை அனுபவித்து செய்து மகிழ்வீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும்.நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## மீனம்

இன்று சிறப்புடன் செயலாற்ற நம்பிக்கையும் புத்துணரச்சியும் தேவை. தியானம் மற்றும் ஸ்லோகம் கேட்பதன் மூலம் இது சாத்தியம்.

பணிவளர்ச்சி சுமுகமாக இருக்காது. அதிகமான பணிகள் சவாலானதாக காணப்படும்.

உங்கள் குடும்பத்தில் இருக்கும் பிரச்சினை காரணமாக உங்களிடம் காணப்படும் அமைதியின்மையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். உங்கள் துணையுடன் அமர்ந்து பேசி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளுங்கள்.

நிதி நிலைமையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படும். பண இழப்புக்கான வாய்ப்புகளும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. தோள் வலி மற்றும் முதுகு வலி ஏற்படலாம்.



